சங்கீதங்கள் 14:2-3

மாசற்ற வாழ்க்கை நடத்துபவன், நீதி நியாயத்தைக் கடைப்பிடிப்பவன், இதயத்தில் நேரியவை நினைப்பவன்; நாவால் எப்பழிச்சொல்லும் கூறாதவன், அயலானுக்குத் தீமை செய்யாதவன், பிறரைப் பழித்துரைக்காதவன்;

யாகப்பர் 3:2

ஏனெனில், நாம் அனைவரும் பலவற்றில் தவறுகிறோம். தவறான பேச்சுக்கு இடங்கொடாதவன் தன் முழு உடலையும் கட்டுப்படுத்த வல்லவன்; அவனே நிறைவு பெற்றவன்.

கொலோசையர் 3:14

இவையெல்லாவற்றிற்கும் மேலாக அன்பை அணிந்துகொள்ளுங்கள். அதுவே எல்லா நற்பண்புகளையும் பிணைந்து நிறைவு அளிப்பது.

உரோமையர் 12:2

இதுவே நீங்கள் செலுத்தவேண்டிய ஆன்மீக வழிபாடு. இவ்வுலகம் காட்டும் மாதிரியைப் பின்பற்றாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று, முற்றிலும் மாற்றம் அடைவதாக. இவ்விதம் கடவுளின் திருவுளம் எது என உய்த்துணர்வீர்கள். அப்போது எது நல்லது, எது உகந்தது, எது தலை சிறந்தது என உங்களுக்கு விளங்கும்.

பிலிப்பியர் 2:14-16

செய்வதெல்லாம் முணுமுணுக்காமல் வாதாடாமல் செய்யுங்கள். அப்பொழுதுதான் நெறிகெட்ட, சீரழிந்த தலைமுறையினரிடையே குற்றமின்றி மாசற்றவர்களாய்க் கடவுளின் குழந்தைகளெனத் திகழ்வீர்கள்; வாழ்வைப் பற்றிய வார்த்தைகளை வழங்க ஏந்தி நின்று, உலகில் சுடர்விடும் விண்மீன்கள் எனத் துலங்குவீர்கள். வீணாக நான் ஓடவில்லை, வெறுமனே நான் உழைக்கவில்லை என்பதற்கு நீங்கள் சான்றாய் நின்று, கிறிஸ்துவின் நாளில் நான் பெருமையடையச் செய்வீர்கள்.

1 கொரிந்தியர் 1:10

சகோதரர்களே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால், உங்களை நான் வேண்டுவது: நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழுங்கள். உங்களிடையே பிளவுகள் வேண்டாம். மாறாக, ஒரே மனமும் ஒரே கருத்தும் கொண்டு, மீண்டும் முற்றிலும் ஒன்றித்து வாழுங்கள்.

1 தெசெலோனிக்கையர் 5:15

உங்களுள் யாரும் பழிக்குப் பழி வாங்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். மாறாக எப்போதும் நன்மையே செய்ய நாடுங்கள்; ஒருவருக்கொருவர் நன்மை செய்யுங்கள்; மற்றெல்லார்க்கும் நன்மை செய்யுங்கள்.

சங்கீதங்கள் 17:30

கடவுள் காட்டும் வழி குற்றமற்றது, ஆண்டவருடைய வாக்குறுதி புடமிடப்பட்டது: அவரிடம் அடைக்கலம் புகுவோரனைவருக்கும் அவரே கேடயம்.

யோபு ஆகமம் 23:10-11

ஆயினும், நான் போகும் வழி அவருக்குத் தெரியும், அவர் என்னைச் சோதித்த பின், பசும்பொன் போல் நான் வெளிப்படுவேன். அவர் அடிச்சுவடுகளிலேயே என் கால் நடந்து சென்றது, விலகாமல் அவர் வழியையே பின்தொடர்ந்தேன்.

சங்கீதங்கள் 118:1

மாசற்ற வழியில் நடப்போர் பேறு பெற்றோர்: ஆண்டவர் தம் திருச்சட்டப்படி நடப்போர் பேறு பெற்றோர்.

யாகப்பர் 1:27

தந்தையாகிய கடவுள் முன்னிலையில் புனிதமும் மாசற்றதுமான தொண்டு எதுவெனில், வேதனையுறும் அனாதைகள், கைம்பெண்கள் இவர்களை ஆதரிப்பதும், உலகத்தால் மாசுபடாமல் தன்னைக் காத்துக் கொள்வதுமே.

அருளப்பர் 16:24

இதுவரையில் என் பெயரால் நீங்கள் எதையும் கேட்டதில்லை. கேளுங்கள், பெற்றுக்கொள்வீர்கள்; அப்போது உங்கள் மகிழ்ச்சி நிறைவுபெறும்.

மத்தேயு 19:21

அதற்கு இயேசு, "நீ நிறைவு பெற விரும்பினால், போய் உன் உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு. வானகத்தில் உனக்குச் செல்வம் கிடைக்கும். பின்னர் வந்து என்னைப் பின்செல்" என்றார்.

யாகப்பர் 1:17

நன்மையான எக்கொடையும், நிறைவான எவ்வரமும், விண்ணினின்றே வருகின்றன. ஒளியெல்லாம் படைத்த தந்தையே அவற்றிற்குப் பிறப்பிடம். அவரிடம் எவ்வகை மாற்றமும் இல்லை; மாறி மாறி நிழல் விழச் செய்யும் ஒளியன்று அவர்.

2 சாமுவேல் ஆகமம் 22:31

இறைவனுடைய வழி மாசற்றது. ஆண்டவருடைய வார்த்தை புடமிடப்பட்டது. தம்மேல் நம்பிக்கை கொள்வோர் அனைவர்க்கும் அவர் கேடயமாய் இருக்கின்றார்.

எபிரேயர் 5:9

இவ்வாறு, நிறைவுள்ளவராகி, தமக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அனைவருக்கும் முடிவில்லா மீட்பின் காரணரானார்.

பழமொழி ஆகமம் 2:7

அவர் நேர்மையுடையோரைக் காப்பாற்றுகிறார்.